# தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆதித்தமிழர் பேரவை சார்பில் பாராட்டு விழா




**ஒட்டன்சத்திரம், பிப். 15-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் இந்திய விடுதலைப் போராட்ட மாவீரர் பொல்லானுக்கு சிலையுடன் கூடிய நினைவகம் கட்டிக் கொடுத்த தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு ஆதித்தமிழர் பேரவை,மற்றும் அருந்ததியர் மக்கள் சார்பில் நன்றி பாராட்டு விழா பொதுக்கூட்டம் ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் தலைவர் அதியமான் தலைமையில் நடைபெற்றது.

விழாவிற்கு தமிழ் நாடு தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் சிவா வரவேற்புரையாற்றினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அருந்ததியர்களுக்கு தமிழ்நாடு அரசு செய்த திட்டங்களை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்.

விழாவில் தி.மு.க.செயற்குழு உறுப்பினர் கண்ணன், ஒன்றிய துணைச்செயலாளர் ராமகிருஷ்ணன், ஆதித்தமிழர் பேரவை பொதுச் செயலாளர் கோவை ரவிக்குமார், துணைப் பொதுச் செயலாளர் சந்திரன், கொள்கை பரப்பு செயலாளர் ராஜா, மாநில மகளிர் அணி செயலாளர் கௌசல்யா காந்தி, மாநில அமைப்புச் செயலாளர் ஈழவேந்தன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் அதியன் அறிவு நன்றி கூறினார்.

# கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கில் அனைத்து ரோட்டரி சங்கம் சார்பில் ஜல்லிக்கட்டு போட்டி



**அலங்காநல்லூர், பிப். 15-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை, கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் அனைத்து மதுரை ரோட்டரி சங்கங்கள் சார்பில் கர்ப்பப்பை வாய் புற்று நோய் விழிப்புணர்வு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது.

காலை 7 மணிக்கு தொடங்கிய இந்த ஜல்லிக்கட்டு போட்டியை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பச்சைக் கொடியசைத்து தொடங்கி வைத்தார். முன்னதாக வருவாய் கோட்டாச்சியர் கருணாகரன், சோழவந்தான் எம்.எல்.ஏ வெங்கடேசன், சர்வதேச ரோட்டரி சங்க துணை தலைவர் முருகானந்தம், ரோட்டரி சங்க ஆளுநர் கார்த்திக், ஜல்லிக்கட்டு ஒருங்கிணைப்பாளர் மொட்டயசாமி என்றமுருகன் ஆகியோர் முன்னிலையில் ஜல்லிக்கட்டு பாதுகாப்பு உறுதிமொழியை வாசிக்க மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள், அரசு அலுவலர்கள் பொதுமக்கள் உள்ளிட்டோர் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

வருவாய் துறையினர், மருத்துவ துறையினர், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் சிறப்பாக விளையாடிய 800 காளைகள், அதனை அடக்க 600 மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர். களத்தில் நின்று விளையாடும் காளையின் உரிமையாளருக்கும், காளைகளை அடக்கும் வீரர்களுக்கும் சைக்கிள், அண்டா, கட்டில், உள்ளிட்ட பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. சிறந்த மாடுபிடி வீரருக்கு 2 லட்சம் மதிப்புள்ள கேடிஎம் பைக் மற்றும் சிறந்த காளை உரிமையாளருக்கு நாட்டு பசு மாடு, கன்று குட்டி பரிசாக வழங்கப்பட உள்ளது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் தலைமையில் 200 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# வத்தலக்குண்டுவில் தி.மு.க. அரசை கண்டித்து அ.தி.மு.க.ஆர்ப்பாட்டம்



**வத்தலக்குண்டு, பிப். 15-**

மத்திய அரசு செயல்படுத்தும் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தை தி.மு.க. அரசு சீர்குலைக்க முயற்சிப்பதாக கூறி அ.தி. மு.க. மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள் சார்பில் வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு உள்ள எம்ஜிஆர் திடலில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு அ. தி.மு.க. மேற்கு ஒன்றிய செயலாளர் சுதாகர்,கிழக்கு செயலாளர் ஒன்றிய அன்ன களஞ்சியம் ஆகியோர் தலைமை தாங்கினார். வத்தலக்குண்டு நகரச் செயலாளர் பீர்முகமது, சேவுகம்பட்டி நகரகச் செயலாளர் மாசாணம், பட்டிவீரன்பட்டி நகரச் செயலாளர் விசு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தேன்மொழி சேகர் எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில்,மக்களை ஏமாற்றி வாக்குகள் பெறுவதற்காக புதிய அறிவிப்புகளை தி.மு.க. வெளியிடுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் எந்தவித மக்கள் நலத்திட்டங்களிலும் அக்கறை செலுத்தாமல் பொய்யான வாக்குறுதிகள், ஏமாற்று வேலைகளை தி.மு.க. அரசு செய்து வருகிறது. ஆனால் மக்கள் விழிப்புணர்வுடன் உள்ளனர்.

தி.மு.க. ஆட்சி மீண்டும் அமையாது என்று தெரிந்து கொண்டு தேர்தல் நெருங்கி வருவதால் மக்களை ஏமாற்ற அவசர புதிய அறிவிப்புகளை வெளியீடுகின்றனர்.வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணிஆட்சி வெற்றி பெற்று அமைப்பது உறுதி என பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் யூனியன் சேர்மன் ஓ ராஜேந்திரன். , முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் இரா மோகன், எம் வி எம் பாண்டியன், ஒன்றிய பொருளாளர்கள் நடராஜன், ரமேஷ்கண்ணா, ஒன்றிய துணைச் செயலாளர் மணிகண்டன், இளைஞர் அணி ஒன்றிய செயலாளர்கள் தட்டிமுருகன், ஜெயபாண்டி ஒன்றிய பாசறை செயலாளர் கவின்தங்கப்பாண்டி, மாவட்ட சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் தகவல் பிரிவு சயலாளர்கள் ஜான், இணைச் செயலாளர் தம்பிராஜா, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் அறிவி, ஒன்றிய தொழில்நுட்ப மனோஜ்குமார், பிரேம்நாத், இளைஞர் இளம்பெண்கள் பாசறை இணைச் செயலாளர் கோபி ராஜா. நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர்கள் அசோக்ராஜா, ஜி தும்மலபட்டி செல்வம், நிலையத்தில் பழைய வத்தல கொண்டு உதயகுமார். ஹபீப் ராஜா. செந்தமிழ் பாண்டி. ஜே பேரவை துரைராஜ். மதன், நகர துணைச் செயலாளர்கள் குமரேசன், ரமேஷ், நகர ஜெயலலிதா பேரவை செயலாளர்நாக ராஜ், நகரப் பொறுப்பாளர் காமாட்சி, உள்பட அதிமுக மற்றும் கூட்டணிக் கட்சி அனைத்து நிர்வாகிகள் தொண்டர்கள் மகளிர் திரளாக கலந்து கொண்டார்கள். முடிவில் பட்டிவீரன்பட்டி பேரூர் செயலாளர் விசு நன்றி கூறினார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதிகள் பொய்யானது: ஆர்.தர்மர் எம்.பி.பேச்சு

**முதுகுளத்தூர், பிப். 14-**

தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யானது மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது என ஆர்.தர்மர் எம்.பி. பேசினார்.

முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் முன்பு தி.மு.க. அரசை கண்டித்து அ.தி.மு.க.வினர் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். தர்மர் - எம்.ஜி.ஆர் மன்ற மாநில இணை செயலாளர் மலேசியா பாண்டியன் ஆகியோர் தலைமை தாங்கினர். தர்மர் எம்.பி.பேசுகையில்

தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் என்ன தவறு நடக்கிறது எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பது பொதுமக்களுக்கு தெரியும்.தி.மு.க. ஊழல் நிறைந்த கட்சி.2021 தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்ற போது 525 தேர்தல் வாக்குறுதிகள் கொடுத்தார்கள் ஆட்சிக்கு வந்த பிறகு மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.குடும்ப அட்டை தார்களுக்கு 1000 தரப்படும் என கூறியவர்கள் இரண்டு ஆண்டுகள் பணமே கொடுக்கவில்லை. சட்டசபையில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கேள்வி கேட்டபிறகு தான் 1000 பணம் கொடுத்தார்கள் . மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு 36000 கோடி நிதியை வழங்கியுள்ளார் கள்.ஆனால் தி.மு.க. அரசு பொய்யான தகவல்களை பரப்பி வருகிறது.இவ்வாறு பேசினார்.

இதில் அ.ம.மு.க. மாவட்ட செயலாளர் எம்.முருகன் அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் செந்தில்குமார் -கர்ணன் கருப்பசாமி மற்றும் பாஜக அமமுக பார்வட்பிளாக் தமிழக முன்னேற்ற கழகம் பாமக உள்ளிட்ட கூட்டணி கட்சியினரும் கலந்து கொண்டனர்.

# நாசிக்கில் ஜெனரல் மில்ஸ் இந்தியா புதிய உற்பத்தி ஆலையை திறந்தது

**சென்னை, பிப் 15-**

அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட பார்ச்சூன் 500 உணவு நிறுவனமான ஜெனரல் மில்ஸ் இன்கார்ப்பரேஷன் ஒரு பகுதியாக செயல்படும் ஜெனரல் மில்ஸ் இந்தியா, மகாராஷ்டிராவின் நாசிக்கில் புதிய அதிநவீன உற்பத்தி ஆலையை திறந்துள்ளது. சுமார் ரூ.100 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலை, இந்தியாவில் நிறுவனத்தின் உற்பத்தி தடத்தை விரிவுபடுத்துவதன், வேகமாக வளர்ந்து வரும் உணவு மற்றும் பேக்கரி துறைக்கான நீண்ட கால அர்ப்பணிப்பை வலுப்படுத்துகிறது. இந்த புதிய உற்பத்தி மையம் பில்ஸ்பரி தயாரிப்புகளின் கிடைக்கும் தன்மையை நாடு முழுவதும் அதிகரித்து, விநியோகச் சங்கிலி திறனை மேம்படுத்தும் என நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான பேக்கரிகளில் நிலையான தரமான தயாரிப்புகள் எளிதாக கிடைக்க வழிவகுக்கும்.

மேலும், இந்த ஆலை உற்பத்தி, தளவாடங்கள் மற்றும் ஆதரவு சேவைகள் துறைகளில் பல நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கி, நாசிக் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் உள்ளூர் சப்ளையர்கள் முன்னேற்றத்துக்கும் ஆதரவாக இருக்கும்.நாசிக்கில் எங்கள் புதிய ஆலை திறக்கப்பட்டதன் மூலம் பில்ஸ்பரி தயாரிப்புகளின் அணுகலை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதில் பெருமை கொள்கிறோம் என்று ஜெனரல் மில்ஸ் உலகளாவிய வளர்ந்து வரும் சந்தைகளின் துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பால்கி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். 1999 முதல் இந்தியாவில் பில்ஸ்பரி பிராண்ட் தரமான பேக்கிங் தயாரிப்புகளை வழங்கி வருவதாக குறிப்பிட்ட அவர், இந்த விரிவாக்கம் நுகர்வோர் மற்றும் பேக்கரி கூட்டாளிகளுக்கு மேலும் சிறப்பாக சேவை செய்ய உதவும் என்றார்.

# பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களுக்கு, சுமங்கலா ஸ்டீல் கல்வி உதவித்தொகைகள்

**சென்னை, பிப் 15-**

சுமங்கலா ஸ்டீலின் உங்கள் குழந்தையும் இன்ஜினியர் ஆகலாம்'' திட்டம் தொடர்ந்து நல்ல வரவேற்பைப் பெற்று முன்னேறி வருகிறது. அதன் மூன்றாவது பதிப்பில் 19 மாணவர்கள் பயன் பெறுகின்றனர். அவர்களின் 3/4 ஆண்டுகளுக்கான முழு கல்விக் கட்டணத்தையும் சுமங்கலா ஏற்று, படிப்பிற்கு உதவியாக லேப்டாப்களையும் வழங்குகிறது. மேலும், முதல் மற்றும் இரண்டாம் பதிப்பில் தேர்வான மாணவர்களும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். இவ்வருடம் மொத்தமாக 53 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். மொத்த கல்வி உதவித் தொகை ரூ. 212 லட்சம் ஆகும். 023 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சுமங்கலா சமூகப் பொறுப்புணர்வு நிதி கல்வி உதவித் திட்டமான உங்கள் குழந்தையும் இன்ஜினியர் ஆகலாம் என்பது, தங்களது சமூகத்தின் குழந்தைகள் இன்ஜினியராக வேண்டும் என்ற கனவை நிறைவேற்ற உதவுவதற்கான சுமங்கலா ஸ்டீல் நிறுவனத்தின் அர்ப்பணிப்பு உணர்வுள்ள முயற்சியாகும்.1985 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சுமங்கலா ஸ்டீல், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகக் கட்டுமானத் துறைக்கு தரம், நிலைத்தன்மை மற்றும் சிறப்புடன் சேவை செய்து, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் மிக நம்பிக்கைக்குரிய மற்றும் அனுபவமிக்க இரும்புக் கம்பி உற்பத்தியாளராக விளங்கி வருகிறது.

இது குறித்து சுமங்கலா ஸ்டீலின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேந்திரன் சபாநாயகம் கூறுகையில், கடந்த 40 ஆண்டுகளாக, கட்டுமானத் தொழிலாளர்களும், டீலர்களும் எங்கள் குடும்பமாக இருந்து வருகின்றனர். சுமங்கலா கல்வி உதவித்தொகை திட்டத்தின் மூலம், அவர்களின் வாழ்க்கையில் இன்னும் பெரிய பங்காற்ற விரும்புகிறோம். அவர்களின் குழந்தைகள் இன்ஜினியர்களாகும் கனவை நிறைவேற்ற உதவுவது எங்கள் இதயபூர்வமான முயற்சியாகும் என்றார். மேலும் பிரபல நடிகரும், கார்ப்பரேட் பயிற்சியாளருமான மோகன் ராமன் சுமங்கலாவின் இந்த முயற்சியைப் பாராட்டினார். நிகழ்ச்சியில் பேசிய அவர், இது மிகவும் சிந்தனையுடனும், சுமங்கலா ஸ்டீலின் மிகப் பெரிய அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தும் செயலாகும். தமிழ்நாட்டின் கட்டுமானத் தொழிலாளர்கள் இந்த அரிய வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன் என்று கூறினார்.

# 6500 எம்ஏஎச் பேட்டரியுடன் ஒப்போ கே14x 5ஜி இந்தியாவில் அறிமுகம்

**மதுரை, பிப் 15-**

இந்தியாவில் தனது கே சீரிஸ் போன்களின் வெற்றியைத் தொடர்ந்து, ஒப்போ இந்திய புதிய ஒப்போ கே14x 5ஜி ஸ்மார்ட்போன் அறிமுகம் செய்துள்ளது. தினசரி பயன்பாட்டிற்கு ஏற்ற பவர், பெர்ஃபார்மன்ஸ் மற்றும் ஸ்மூத்தான அனுபவம் ஆகியவற்றை ஒருங்கே வழங்கும் இந்த போன், மாணவர்கள், கேமராக்கள் மற்றும் அதிக நேரம் போன் பயன்படுத்துபவர்களை குறிவைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. 6500 எம்ஏஎச்பெரிய பேட்டரி, 45டபிள்யூ ஃபாஸ்ட் சார்ஜிங், 6.75 120எச்இசட் டிஸ்ப்ளே மற்றும் மீடியாடெக் பரிமாணம் 6300 சிப்செட் ஆகிய அம்சங்கள் இதன் முக்கிய சிறப்பம்சங்களாகும். ஒப்போ கே14x 5ஜி இரண்டு வேரியண்ட்டுகளில் கிடைக்கிறது. 4ஜிபி+128ஜிபி ரூ.14,999 மற்றும் 6ஜிபி+128ஜிபி ரூ.16,999. குறிப்பிட்ட வங்கி சலுகைகளுடன், வாடிக்கையாளர்களை இதை ரூ.13,499 ஆரம்ப விலையில் பெற்றுக்கொள்ளலாம். பிப்ரவரி 16 மதியம் 12 மணி முதல் ஒப்போ இ-ஸ்டோர் மற்றும் ப்ளிப்கார்ட் தளங்களில் விற்பனை தொடங்குகிறது. ஐசி புளூ மற்றும் பிரிசம் வயலட் நிறங்களில் இந்த போன் கிடைக்கும்.

இது குறித்து ஒப்போ இந்திய கம்யூனிகேஷன்ஸ் தலைவர் கோல்டி பட்நாயக் கூறுகையில், இந்திய பயனாளர்களின் நம்பிக்கையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் ஒப்போ கே14x 5ஜி வடிவமைக்கப்பட்டுள்ளது. நீடித்த பேட்டரி, நம்பகமான செயல்திறன் மற்றும் தடையற்ற பயன்பாடு ஆகியவை இந்த பாடலின் முக்கிய வலிமைகள் என்று கூறினார்.



**மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 109-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட மத்திய 7 -ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் சக்திவிநாயகர் பாண்டியன், தலைமையில் ஆறுமுச்சந்தி பகுதியில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதி துண்டு பிரசுரங்களை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, ஆர்.அண்ணாதுரை, பா.குமார், சக்திமோகன், புதூர் சந்திரன், அண்ணாநகர் ரவிச்சந்திரன், மார்க்கெட் செந்தில்குமார், வி.பிஆர்.செல்வகுமார், நீதிகாந்த், தளபதி மாரியப்பன், ரவிராஜ், எம்.ஏ.நாசர், திடீர்நகர் பாலா, அஸ்வின்குமார், மார்க்கெட் மார்நாடு,கார்னர் பாஸ்கர் மற்றும் தேவதாஸ், பஜார்துரைபாண்டி, பத்மநாபன், ராமச்சந்திரன்,எஸ்.பி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**



**ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் மாசி மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு ராமநாதசுவாமி, பர்வதவர்த்தினி அம்மன் முத்தங்கி சேவை அலங்காரத்தில் நான்கு ரத வீதியில் உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தனர்.**

# திருமங்கலத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் சிறப்பு முகாம்




**திருமங்கலம், பிப். 15-**

மதுரை மாவட்டம் ஆதி திராவிட நலத்துறை சார்பாக திருமங்கலம் கள்ளிக்குடி பேரையூர் உசிலம்பட்டி திருப்பரங்குன்றம் ஆகிய வட்டங்களில் வசிக்கின்ற புதிரை வண்ணான் சமுதாயத்திற்கான சிறப்பு முகாம் திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த முகாமிற்கு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் ராமகிருஷ்ணன், திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் சிவஜோதி ஆகியோர் தலைமை வகித்தனர். இதில் அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டு புதிரை வண்ணான் சமுதாய மக்களுக்கு உரிய அனைத்து கோரிக்கையை தொடர்பாக விசாரணை செய்து உடனடியாக தீர்வு செய்யப்படும் என தெரிவித்தனர். மேற்கண்ட சிறப்பு முகாமில் 150க்கு மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# நிலக்கோட்டை அணைப்பட்டியில் உலக சதுப்பு நிலப் பாதுகாப்பு தினம்




**வத்தலகுண்டு, பிப். 15-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகாவில் வைகை அறக்கட்டளையும் ஒய் ஸ்கா இன்டர்நேஷனல் இணைந்து அணைப்பட்டி ஆஞ்சநேயர் கோயில் ஆற்று இரு கரைகளிலும் பிளாஸ்டிக் குப்பைகளை அகற்றும் பணியை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியை மேட்டுப்பட்டி ஊராட்சி செயலாளர் கார்த்திக். பிள்ளையார் நத்தம் ஊராட்சி செயலாளர் சின்னச்சாமி. துவக்கி வைத்தனர் வைகை அறக்கட்டளை திட்ட இயக்குனர் அண்ணாதுரை ஆஞ்சநேயர் கோயிலில் பக்தர்கள் பிளாஸ்டிக் குப்பைகளை ஆங்காங்கே குவிப்பதை தடுத்து நிறுத்த ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை என்பதையும் இதற்கு இரண்டு பஞ்சாயத்து நிர்வாகமும் ஒருங்கிணைந்து பிளாஸ்டிக் இல்லாத ஆஞ்சநேயர் போல கோயிலாக அறிவிக்கப்பட வேண்டும். பிளாஸ்டிக்கை கொட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். என்று பேசினார்.

பின்பு வைகை ஆற்று கரையில் உள்ள குப்பைகளை வைகை பாதுகாப்பு குழு குழந்தைகள் அமைப்பினர். அகற்றினார் என்று உலக சதுப்பு நில பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகளை நட்டு நடைபாதை வியாபாரிகள் சங்க செயலாளர் மகாராஜன் சிறப்பு வைத்தார் நிகழ்ச்சியின் இறுதியில் விக்னேஷ் நன்றி கூறினார்



**திட்ட மேலாண்மை அசோசியேட்ஸ் (பிஎம்ஏஇந்தியா) மற்றும் சர்வதேச திட்ட மேலாண்மை சங்கம் (ஐபிஎம்ஏ) இணைந்து நடத்தும் 'சர்வதேச திட்ட மேலாண்மை நிபுணர்கள் மாநாடு 2026' மாமல்லபுரத்தில் தொடங்கியது. இதில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். ஐபிஎம்ஏ தலைவர் முனைவர் மிலடன் வுகோமனோவிக் தொடக்க உரையாற்றினார். பிஎம்ஏ இந்தியா தலைவர் முனைவர் ஏ.சிவதானு பிள்ளை வரவேற்புரை ஆற்றினார். தி ஹிந்து குழும இயக்குநர் என். ராம் கௌரவ விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரை வழங்கினார்.**

### ராஜபாளையம் பகுதியில்

# சிவாலயங்களில் சனி மகா பிரதோஷம்

## ஏராளமான பக்தர்கள் பங்கேற்று வழிபாடு



**ராஜபாளையம், பிப். 15-**

சிவாலயங்களில் சனிக்கிழமைகளில் பிரதோஷம் வருமானால் அது சனி மகா பிரதோஷம் என சிவபக்தர்களால் அழைக்கப்படும். ஏழரைச் சனி அஸ்தம சனி நடந்தால் நாம் சனி பிரதோஷம் அன்று சிவன் கோயிலுக்குச் சென்று சிவபெருமானையும் நந்தியும் பெருமானையும் அபிஷேக காட்சிகளை கண்டு தரிசித்தால் மகா புண்ணியம் கிட்டும். சனி மகா பிரதோஷம் அன்று சிவன் கோவிலுக்கு சென்று வழிபட்டால் 120 ஆண்டுகள் பிரதோஷத்திற்கு சென்ற பலன் நமக்கு கிடைக்கும் என சிவ ஆகமம் கூறுகிறது.

பிறதோஷங்களை நீக்கும் பிரதோஷம் கிரக தோஷம், தீமைகள் பஞ்சமா பாவங்களை நீக்கி சிவன் அருள் கிடைக்கும் என்பதால் சனி மகா பிரதோஷம் மிக சிறப்பு வாய்ந்தது. அந்த வகையில் ராஜபாளையம் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் உள்ள சிவாலயங்களில் சனி மகா பிரதோஷம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அப்பொழுது மூலவரான சிவபெருமான் எதிரே பிரம்மாண்டமாக வீற்றிருக்கும் நந்தியம் பெருமானுக்கும் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றது.

ராஜபாளையம் அருகே சொக்கநாதன் புத்தூர் தவ நந்தி கண்டீஸ்வரர் கோவிலில் வடக்கு நோக்கி நிலையில் ஈஸ்வரர் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளிப்பது சிறப்பான அம்சமாகும். மஞ்சள் பால் தேன் தயிர் வாசனை திரவியங்கள் கொண்டு 16 வகையான நறுமணப் பொருட்களைக் கொண்டு தொடர்ந்து அபிஷேகம் நடைபெற்றது. கோவில் சிவாச்சாரியார்கள் அபிஷேகங்களை நடத்திய போது திரண்டிருந்த ஏராளமான பக்தர்கள் தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என கோஷமிட்டனர். தொடர்ந்து சிவபெருமானுக்கும் நந்தியம் பெருமானுக்கும் சர்வா அலங்காரம் நடைபெற்று தீபாராதனை காட்டப்பட்டது. பக்தர்கள் தங்கள் பெயர் ராசி நட்சத்திரங்களுக்கு அர்ச்சனை செய்து பிரதோஷத்தில் கலந்து கொண்டனர். தொடர்ந்து பக்தர்களுக்கு அபிஷேகப் பால் பிரசாதமாக வழங்கப்பட்டது.

# தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்ட திட்டங்கள் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் செயல்படுத்தப்படும்

## முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் பேச்சு



**நத்தம், பிப். 15-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக அ.தி.மு.க.சார்பாக 125 நாள் வேலையை சீர்குலைக்க முயலும் தி.மு.க. அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது. இதற்கு முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் எம்.எல்.ஏ தலைமை தாங்கினார்.கழக ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் கண்ணன், அ.தி.மு.க.ஒன்றிய செயலாளர்கள் ராமராஜ்,மணிகண்டன், சின்னு , மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் ஜெயபாலன், நகர அவைத்தலைவர் சேக் ஒலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் பேசியதாவது:-

மத்திய அரசு கொண்டு வந்துள்ள 125 நாள் வேலை திட்டத்தை தி.மு.க. அரசு பொதுமக்களிடம் தவறுதலாக கூறி அதை சீர்குலைக்க நினைக்கிறது.ஆனால் அது பொதுமக்களிடம் எடுபடாது.இனி கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும் தி.மு.க. ஆட்சி வராது. மேலும் தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்ட திட்டங்கள் மீண்டும் அ.தி.மு.க.ஆட்சி அமைந்தவுடன் செயல்படுத்தப்படும், தமிழகம் போதை மாநிலமாக மாறி வருகிறது.எங்கு பார்த்தாலும் சாராயம், கஞ்சா போன்ற பொருட்கள் சாதாரணமாக கிடைக்கிறது. வருகின்ற தேர்தல் தி.மு.க.வுக்கு சாதகமில்லை என கூறியதால் மகளிர் உதவித்தொகையாக ரூ. 5 ஆயிரத்தை வங்கி கணக்கில் போட்டு மக்களை ஏமாற்ற நினைக்கின்றனர். வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க.அதிக இடங்களில் அமோக வெற்றி பெறும். மீண்டும் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராவார். இவ்வாறு அவர் பேசினார்.இதில் தொழிலதிபர் அமர்நாத், ஒன்றிய அவைத்தலைவர் பிறவிக்கவுண்டர், முன்னாள் மாவட்ட கவுன்சிலர்கள் சின்னாக்கவுண்டர், பார்வதி, நகர நிர்வாகி ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆட்டுக்குளம் ஊராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு மருத்துவ முகாம்



**மேலூர், பிப். 15-**

மதுரை மாவட்டம், மேலூர் வட்டாரத்தில் உள்ள ஆட்டுக்குளம் ஊராட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் ஏசியன் பள்ளியில் நடைபெற்றது. நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் 17 சிறப்பு மருத்துவர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில் அனைத்து விதமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. குறிப்பாக இருதய ஸ்கேன், கர்ப்பிணிகளுக்கான அல்ட்ரா சவுண்டு ஸ்கேன், எக்ஸ்ரே, அனைத்து ரத்தம் மற்றும் நீர் பரிசோதனை செய்யப்பட்டது. முகாமில் 2000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

முகாமில் மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர். பொற்செல்வன், மேலூர் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் அம்பலம் சிவநேஷ் ஆகியோர் முகாமினை ஏற்பாடு செய்திருந்தனர். மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் க. அன்பழகன், மேலூர் வட்டாட்சியர் செந்தாமரை ஆகியோர் முகாமில் பங்கேற்று ஆய்வு செய்தனர். முகாமில் 150 க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அனைவருக்கும் காலை மற்றும் மதிய உணவு பரிமாறப்பட்டது. கர்ப்பிணி பெண்களுக்கு பரிசு பெட்டகம் வழங்கப்பட்டது. முகாமில் மாவட்ட இணை இயக்குநர் செல்வராஜ், டாக்டர் செந்தில்நேஷ், மாவட்ட சுகாதார அலுவலக மருத்துவர்கள் கபீர், அஜய், சதீஸ்குமார், சுகாதார நலக்கல்வியாளர் முத்துவேல், அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர்கள், மேலூர் வட்டார மருத்துவர்கள், மேலூர் அரசு மருத்துவமனை மருத்துவர்கள், மாவட்ட அலுவலக பணியாளர்கள் உட்பட 650 க்கும் மேற்பட்டோர் பணியில் ஈடுபட்டனர்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 /94

## அமேசான் பிரைமின் புதிய உறுப்பினர்களில் 70% பேர் சிறு நகரங்களைச் சேர்ந்தவர்கள்

**பாண்டிச்சேரி, பிப் 15-**

2025 ஆம் ஆண்டு பிரைம் உறுப்பினர்களுக்கான வேகமான டெலிவரி வேகத்தைக் குறிக்கிறது என்று அமேசான் இன்று அறிவித்துள்ளது, அதே நாளில் அல்லது அடுத்த நாளில் 55 கோடிக்கும் அதிகமான தயாரிப்புகள் டெலிவரி செய்யப்பட்டன - இது ஆண்டுக்கு ஆண்டு 40% அதிகரிப்பு. இந்தியாவில் உள்ள பிரைம் உறுப்பினர்கள் 2025 ஆம் ஆண்டில் வருடாந்திர பிரைம் உறுப்பினர் செலவை விட சராசரியாக இரண்டு மடங்கு அதிகமாக சேமித்துள்ளனர்,

இது நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பிரைம் வழங்கும் மதிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. முதல் 10% பிரைம் உறுப்பினர்கள் தங்கள் பிரைம் உறுப்பினர் செலவை விட எட்டு மடங்கு அதிகமாக சேமித்துள்ளதால், பிரைம் இன் இந்திய வாடிக்கையாளர்கள் Amazon.in இல் ஷாப்பிங் செய்யும்போது இலவச மற்றும் விரைவான டெலிவரி மூலம் பல வெகுமதிகள், பிரத்யேக ஒப்பந்தங்கள், சலுகைகள் மற்றும் கேஷ்பேக்குகள் மூலம் இன்னும் அதிகமாக சேமிக்க உதவுகிறது.

விரைவான டெலிவரிகள் மற்றும் சிறந்த சலுகைகளுக்கு அப்பால், பிரைம் உறுப்பினர் பல நன்மைகளை வழங்குகிறது - புதிய தயாரிப்பு வெளியீடுகள், விருது பெற்ற நிகழ்ச்சிகள் மற்றும் பிரைம் வீடியோவில் திரைப்படங்கள், வரம்பற்ற இசை ஸ்ட்ரீமிங், அற்புதமான கேமிங் சலுகைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்பு உள்ளடக்கம் ஆகியவற்றிற்கான ஆரம்ப அணுகல்.

"நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் எங்கள் வாடிக்கையாளர்கள் மையத்தில் உள்ளனர், மேலும் பிரைம் அவர்களின் அன்றாட வாழ்க்கையின் அர்த்தமுள்ள பகுதியாக மாறியிருப்பதைப் பார்ப்பது நம்பமுடியாத அளவிற்கு பணிவாக இருக்கிறது" என்று அமேசான் இந்தியாவின் பிரைமின் இயக்குநரும் தலைவருமான அபினவ் அகர்வால் கூறினார். "கடைசி நிமிட அத்தியாவசியமானதாக இருந்தாலும் சரி, திட்டமிட்ட கொள்முதலாக இருந்தாலும் சரி அல்லது முழு குடும்பமும் அனுபவிக்கக்கூடிய பொழுதுபோக்காக இருந்தாலும் சரி, பிரைம் வேகம், ஒப்பிடமுடியாத மதிப்பு மற்றும் வசதியை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

## பிரைம் உறுப்பினர்கள் மற்றவர்களை விட 5 மடங்கு அதிகமாக ஷாப்பிங் செய்கின்றனர்

**மதுரை, பிப் 15-**

2025 ஆம் ஆண்டு பிரைம் உறுப்பினர்களுக்கான வேகமான டெலிவரி வேகத்தைக் குறிக்கிறது என்று அமேசான் இன்று அறிவித்துள்ளது, அதே நாளில் அல்லது அடுத்த நாளில் 55 கோடிக்கும் அதிகமான தயாரிப்புகள் டெலிவரி செய்யப்பட்டன - இது ஆண்டுக்கு ஆண்டு 40% அதிகரிப்பு. இந்தியாவில் உள்ள பிரைம் உறுப்பினர்கள் 2025 ஆம் ஆண்டில் வருடாந்திர பிரைம் உறுப்பினர் செலவை விட சராசரியாக இரண்டு மடங்கு அதிகமாக சேமித்துள்ளனர், இது நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பிரைம் வழங்கும் மதிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. முதல் 10% பிரைம் உறுப்பினர்கள் தங்கள் பிரைம் உறுப்பினர் செலவை விட எட்டு மடங்கு அதிகமாக சேமித்துள்ளதால், பிரைம் இன் இந்திய வாடிக்கையாளர்கள் Amazon.in இல் ஷாப்பிங் செய்யும் போது இலவச மற்றும் விரைவான டெலிவரி மூலம் பல வெகுமதிகள், பிரத்யேக ஒப்பந்தங்கள், சலுகைகள் மற்றும் கேஷ்பேக்குகள் மூலம் இன்னும் அதிகமாக சேமிக்க உதவுகிறது.

இந்தியாவின் பெருநகரங்கள் அல்லாத நகரங்களிலிருந்து 70% க்கும் அதிகமான புதிய பிரைம் உறுப்பினர் பதிவுகளை அமேசான் தொடர்ந்து காண்கிறது, பிரைம் உறுப்பினர்கள் அல்லாதவர்களை விட உறுப்பினர்கள் ஐந்து மடங்கு அதிகமாக ஷாப்பிங் செய்கிறார்கள். பெங்களூரு, டெல்லி-என்.சி.ஆர் மற்றும் மும்பையின் சில பகுதிகளில் அமேசான் அதன் அதிவேக டெலிவரி சேவையான அமேசான் நவ்-ஐ சில நிமிடங்களில் டெலிவரி செய்கிறது, பிரைம் உறுப்பினர்கள் சேவையைப் பயன்படுத்தத் தொடங்கியதும் அவர்களின் ஷாப்பிங் அதிர்வெண்ணை மூன்று மடங்காக அதிகரிக்கிறது.

"நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் எங்கள் வாடிக்கையாளர்கள் மையத்தில் உள்ளனர், மேலும் பிரைம் அவர்களின் அன்றாட வாழ்க்கையின் அர்த்தமுள்ள பகுதியாக மாறியிருப்பதைப் பார்ப்பது நம்பமுடியாத அளவிற்கு பணிவாக இருக்கிறது" என்று அமேசான் இந்தியாவின் பிரைமின் இயக்குநரும் தலைவருமான அபினவ் அகர்வால் கூறினார்.

## டிசிஐ - 2026 நிதியாண்டு மூன்றாம் காலாண்டில் வலுவான வளர்ச்சி பதிவு

**சென்னை, பிப் 15-**

இந்தியாவின் முன்னணி ஒருங்கிணைந்த பன்முக போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி தீர்வுகள் வழங்குநர் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (டிசிஐ), 2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த 2026 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கு நிதி முடிவுகளை அறிவித்துள்ளது. மாறமிக்க சந்தை சூழலும் நிறுவனம் நிலையான செயல்திறனை பதிவு செய்துள்ளது. கியூ3எப்ஓய்2026 செயல்திறன் குறித்து டிசிஐ நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வினீத் அகர்வால் கூறுகையில், பண்டிகை கால தேவையால் எப்எம்சிஜி மற்றும் எம்எஸ்எம்இ சார்ந்த ஒருங்கிணைந்த லாஜிஸ்டிக்ஸ் தீர்வுகளில் முன்னேற்றம் காணப்பட்டது. ஜிஎஸ்டி 2.0 அமலாக்கத்தின் ஆரம்ப சவால்களுக்கு பின்னர் கிடைத்த தெளிவு சரக்கு இயக்கத்தை வேகப்படுத்தியது.

ஆட்டோமொபைல், நுகர்வோர் நீடித்த பொருட்கள், மருந்துகள் மற்றும் ஈ-காமர்ஸ் துறைகள் முக்கிய வளர்ச்சி இயக்கிகள் இருந்த சாலை மற்றும் ரெயில் போக்குவரத்து அளவுகள் மற்றும் கிடங்கு பயன்பாடு அதிகரித்தது என்றார். ரெயில், கடலோர மற்றும் நெட்வொர்க் சார்ந்த லாஜிஸ்டிக்ஸ் சேவைகள் விரிவுபடுத்தியது டன், கிடங்கு வசதிகள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகளிலும் டிசிஐ தொடர்ந்து முதலீடு செய்துள்ளது. பண்டிகை காலத்திற்குப் பிறகு சரக்கு அளவுகள் இயல்புநிலைக்கு திரும்பும் என எதிர்பார்த்தாலும், எம்எஸ்எம்இ துறையின் நம்பிக்கை, டையர் 2 மற்றும் டையர் 3 நகரங்களில் அதிகரிக்கும் நுகர்வு, கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் உருவாகும் வாய்ப்புகள் நடுக்கால வளர்ச்சிக்கு வலுவான ஆதாரமாக இருக்கும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரியில் நுகர்வோர் சட்ட விழிப்புணர்வு முகாம்



**திருமங்கலம், பிப். 15-**

நாடார் மஹாஜன சங்கம் சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி மற்றும் தமிழ்நாடு குடிமக்கள் நுகர்வோர் பாதுகாப்பு மையம் இணைந்து நடத்தும் நுகர்வோர் சட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் உணவு பாதுகாப்பு கலப்பட தடுப்பு விழிப்புணர்வு முகாம் சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த முகாமில் கல்லூரி முதல்வர் கவிதா வரவேற்று பேசினார்.சிறப்பு விருந்தினராக பங்கேற்று போதை புழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு கருத்துக்களை பேசி மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு டி.எஸ்.பி.பாஸ்கரன் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து மையத்தின் மாநில தலைவர் கர்ணன் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் சட்டம் குறிப்புகளையும் , உணவு கலப்படம் குறித்து கல்லூரி மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.மாவட்ட சமூகநலத்துறை அலுவலர் காந்திமதி, இந்திய வடிக்கறிஞர் கள் சங்கத் தலைவர் வழக்கறிஞர் சாமிதுரை ஆகிய இருவரும் போக்சோ, பாலியல், குழந்தை திருமணம், வன்முறை தண்டனை சட்டம் குறித்து சிறப்புரையாற்றினர்.

மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் டாக்டர் சிவராம பாண்டியன் கல்லூரி விடுதியில் திடீர் விசிட் செய்து உணவு மற்றும் சுகாதாரம் இல்லா கலப்பட சட்டம் குறித்து சிறப்புரையாற்றினர். முன்னதாக கல்லூரியில் நடைபெற்ற உணவு கலப்பட விழிப்புணர்வு பயிற்சி பட்டறை போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகள் 50 பேருக்கு பரிசளிப்பு மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் உணவு பாதுகாப்பு அலுவலர் சிவசந்திரன், இணைச்செயலாளர் முத்துக்குமார், ஒருங்கிணைப் பாளர்கள், சண்முகவடிவு, கவிதா ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தனர். 500-க்கு மேற்பட்ட கல்லூரி மாணவிகள் உடன் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். முடிவில் பேராசிரியர் பிரியா நன்றி கூறினார்.



**மதுரை செல்லூர் கட்டபொம்மன் நகர் பந்தல்குடி கால்வாய் பணிகள் நடைபெற்று வருகிறது. செல்லூர் பகுதியில் கழிவுநீர் மற்றும் மழைநீர் செல்வதற்கு வழி இல்லாமல் தடுப்பு சுவர் அமைப்பதை கண்டித்து 24,26,.27-வது வார்டு மாமன்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஏ.மாயத்தேவன் மற்றும் சொக்காயி மற்றும் பொதுமக்கள் 100-க்கும் மேற்பட்டோர் கால்வாய் பணி செய்யும் பகுதியில் வாகனங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.**

### நிலக்கோட்டை அருகே

# நிழற்குடை அமைக்க பூமி பூஜை

**வத்தலகுண்டு, பிப். 15-**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எஸ் மேட்டுப்பட்டி மக்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக உசிலம்பட்டி நிலக்கோட்டை அணைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும்போது பஸ்காக காத்திருப்பதற்கு ஒரு நிழல் கூட இல்லை.

இந்த நிழற்குடையை கட்டித் தரக் கோரி நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எஸ் தேன்மொழி சேகர் இடம் பலமுறை கோரிக்கை வைத்த வண்ணம் இருந்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்று நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தேன்மொழி சேகர் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 6 லட்சத்தை நிதி ஒதுக்கினார். அதன்படி பூமி பூஜை போடும் விழா நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தேன்மொழி சேகர் தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு துணைத் தலைவர் யாகப்பன், அ.தி.மு.க. மேற்கு ஒன்றிய செயலாளர் நல்லதம்பி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மூர்த்தி, நிலக்கோட்டை முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் வி. எஸ் .எஸ் .சேகர், எஸ்.மேட்டுப்பட்டி முன்னாள் ஊரா ட்சி மன்ற தலைவர் காட்டுராசா, மாவட்ட பிரதிநிதி ஜேசுராசு, நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றிய எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் மோகன் குமார், கிளைச் செயலாளர் முனியப்பன், மேலவை பிரதிநிதி ஒச்சு, அரசு ஒப்பந்ததாரர் பாண்டி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு
**திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் (தேர்வுநிலை) பேரூராட்சி**

ந.க.எண். 30/ 2026 **ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை** நாள். 13.02.2026

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் (தேர்வுநிலை) பேரூராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2025-2026ம் ஆண்டிற்கு கீழ்கண்ட வேலையினை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 13.02.2026ம் தேதி வெள்ளிக்கிழமை முதல் https://tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்பவர்கள் அட்டவணை கலம் எண்.4 ல் கண்டுள்ள முன்வைப்புத் தொகையை ஆன்லைனில் செலுத்தி **20.02.2026ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்குள்** இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **20.02.2026 அன்று வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு** பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால், நேரில் ஆஜராகி உள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி உறை (Technail Bid) திறக்கப்படும்.

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம். (KNMT) 2025-2026**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | செலுத்த வேண்டிய முன் வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம். (KNMT) 2025-2026 குன்னத்தூர் பேரூராட்சியில் வார்டு எண்.4 பொன்காளியம்மன் நகர் தார்சாலை அமைத்தல் பணி. | 53,00,000/- | 1,06,000/- |

நிபந்தனைகள் : 1. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விதிமுறைகளை கடைபிடிக்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
3. ஒப்பந்தப்புள்ளியினை ஒத்தி வைக்கவோ, ரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
4.ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

தலைவர், குன்னத்தூர் பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம். செ.ம.தொ.இ./ 1102/ ஒப்பந்தப்புள்ளி / 2026 செயல் அலுவலர், குன்னத்தூர் பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திண்டுக்கல்.**
**O.S.No.27/2025**
சந்திரன் ...... வாதி
லெட்சுமி,
க/பெ.சுந்தர்ராஜ் .
க.எண்.41/R31,
சோனைமுத்து கோனார் சந்து,
ஒய்.எம்.ஆர்.பட்டி,
திண்டுக்கல் டவுன்,
திண்டுக்கல் மாவட்டம்.
..... 2ம் பிரதிவாதி
அறிவிப்பு
வாதியால், சமூகம் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் மீது விளம்புகை செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து 2ம் பிரதிவாதி ஆஜராக வருகின்ற 10.03.2026ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. காலை 10.00மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும். தவறும்பட்சம், தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்படும் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.
S. SELVA KUMAR B.A..B.L..
D.JEEVA SELVAKUMAR
ADVOCATES, DINDIGUL.

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்**
ந.க அ7 / 693/ 2026
கோட்டைசாமி , த/பெ.கிருஷ்ணன்,
7-90 தர்ம முனீஸ்வரர் கோயில் தெரு ,
ஆர். எஸ். மங்களம் அஞ்சல் &
வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்,
-மனுதார்
-எதிர்-
வட்டாட்சியர்,
பிறப்பு / இறப்பு பதிவாளர்,
ஆர். எஸ். மங்கலம்
-எதிர்மனுதார்
அறிவிப்பு
மேற்கண்ட முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் கடந்த 27.12.1964 ஆம் தேதி எனது சொந்த ஊரான இராஜசிங்கமங்கலம் பஞ்சாயத்து பெத்தார்தேவன்கோட்டை கிராமத்தில் பிறந்தேன்.அப்போது எனது பெற்றோர்கள் அறியாமையின் காரணமாக பிறப்பு பதிவேட்டில் பதியாமல் இருந்துவிட்டனர். எனவே எனது பிறப்பினை எதிர்மனுதார் அலுவலக பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
கி.கோட்டைசாமி
மனுதாரர்

**மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். உசிலம்பட்டி.**
ந.க.எண்:07028/2026/ஆ3
குழந்தைவேல், த/பெ.சதாசிவம்
காண்டை கிராமம்
திருமங்கலம் வட்டம்
மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.
------ எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய நான்,எனது தந்தையின் தந்தை சுப்பிரமணியன், த/பெ.குழந்தைவேல் என்பவர் கடந்த 19.10.1972-ம் தேதி மதுரை மாவட்டம்,உசிலம்பட்டி தாலுகா,அல்லிகுண்டம் கிராமம் உட்கடை அயோத்திபட்டியில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர்
குழந்தைவேல்
காண்டை, திருமங்கலம் வட்டம்.

**மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். உசிலம்பட்டி.**
அ.தி.மு.எண்:06583/2025/ஆ3
க.ராகவன்
த/பெ.லேட்.கருத்தக்கண்ணன்
கட்டத்தேவன்பட்டி
வேப்பனுத்து (கி), உசிலம்பட்டி
வட்டம், மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.
------ எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய நான்,எனது தாயார் லட்சுமி, க/பெ.லேட்.கருத்தக்கண்ணன் என்பவர் கடந்த 03.05.1997-ம் தேதி மதுரை மாவட்டம்,உசிலம்பட்டி தாலுகா,கட்டத்தேவன்பட்டி கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர்
க.ராகவன்
கட்டத்தேவன்பட்டி
உசிலம்பட்டி வட்டம்.

